# வெற்றிமணி

## ஆண்டு மலர்

14-1-1956







### பொங்கல் வாழ்த்து

"புது நெல் லரிசியினோடு—பால்
பொங்கல் பொங்கிட எங்கும்
அதிர்வளை மங்கைமார்கள்—தம்
அன்பும் தேனும் கலந்து
முதிரா வழுக்கை இளநீர்—நனி
முற்றக் கழையின் சாறும்
உதிர் மாதுளை யின்முத்தும்—தந்
துவக்க உவக்க நின்றார்"

—புரட்சிக்கவிஞர்

# புதுமைநிறை பூதானம்

(புலவர்; நா. சிவபாதசுந்தரன்)

—

புதுமை நிறை பூதானம்—தோழி
பொலிந்து பரவுதடீ
மோதும் புயலுலகில்—இதன்
மேன்மையைப் பாடுவோம்—தோழி
1 மேலெழுந் தாடிடுவோம்

எங்குமுறு காற்றும் எரியும்
எடுக்கும் குளிர்நீரும்—தோழி
எவர்க்கும் உரித்திலைபோல்—இவ்
எல்லையில் மண்ணுரிமை—இனி
2 எவர்க்கும் இலைதோழி

என்ற நறுங்கருத்தே—இனி
ஏற்றதாய்க் காணுதடீ—தோழி
விண்ட வினோபாவே—உலகு
கேட்டே வியக்குதடி—இந்தியா
3 கண்டே அணைக்குதடி

கைத்தொழில் மாற்றத்தால்—இந்த
காசினி கண்ணிழக்க—தோழி
மெத்தவே ஒருவராட்சி—இந்தியா
மேவியே தூண்டுதடீ—இம்மண்
4 வேட்கை தணிந்ததடீ


வானமும் அலைகடலும்—ஆட்சியில்
வகுத்தே வருநாளில்—தோழி
தானம் புவிதானம்—மிக
தக்க தொரு மருந்தாம்—இந்திய
5 சக்தி தருவிருந்தாம்



# T. PONNIAH,

**MANUFACTURING JEWELLER**





து. பொன்னையா

ஆடர்களுக்கு நகைகள் செய்து கொடுக்கப்படும்

**8/1, Baily Road, NAWALAPITIYA**

---

## සලීම් ස්ටෝර්ස්

10 අඹගමුව පාර ගම්පොල

සියළුම වර්ගවල සාප්පු බඩු, තඹ පිත්තල සහ ඇළුමිනියම් බඩු වර්ගද, නවීන මෝස්තරවල පිඟන් කෝප්පද තොග වශයෙන් සහ සිල්ලරට අපෙන් ලබාගත හැක. වරක් පැමිණ බලන්න

சகலவிதமான சாப்புச்சாமான்களும், விதம்வித மான வெங்கலம் அலுமினிய பாத்திரங்களும் நவீன விதமான பீங்கான் தினுசுகளும்

சகாயமான விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்கப்படும் பாடசாலைக்குத் தேவையான கடதாசி, பென்சில் கொப்பிமுதலியனவும் மற்றும் சாமான்களும் கிடைக்கும்

## ச லீ ம் ஸ் டோ ர் ஸ்

10, அம்பகமுவ ரோட், கம்பளை

# ஒரே கோட்டில் நேரு




வரைந்தனுப்பியவர்:-

எம். பாருக்,
39, கொழும்பு வீதி கண்டி.

## முத்திரை சேகரிப்பவர்களுக்கு!

பாவித்த எந்த இலங்கை முத்திரைகளையும் அனுப்பி
அதே தொகையான பிறதேச முத்திரைகளைப் பெற்றுக்கொள்க.
கிழிந்த, பழுதான முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.
முத்திரைகளை மாற்ற அனுப்பும்போது தபாற்செலவுக்கு
புதிய 10–சத முத்திரை வைத்து அனுப்பவேண்டும்.

**Palathingal J. JOSEPH**
**Sucella Star,**
**NAWALAPITIYA (Ceylon)**



# சமர்ப்பணம்

பாகுமொழிகேட்டுப் பரவசமடைந்து, பாலும் பழமும் உண்டு பட்டாடை பூண்டு, பலவளமும் பெற்று வாழ்வில் மகிழ்ச்சியும் புதுமையும் பொங்கி இன்பம் பெறுக.

பொங்குக இன்பம்! பூத்திடுக தன்னாட்சி
பொலிவு பெருக தமிழ்நாடு—

ஒரு ஆண்டுக்குமுன் குறுக்கெழுத்துப் போட்டிகளின் விமர்சனியாக வெளிவந்தேன். என்னுடன் தோன்றியவர்களிற்பலர் இருந்த இடம் தெரியாது அழிந்து இறந்துபட்டனர். ஆசிரிய உலகமும் மாணவ உலகமும் அடிக்கடி கொடுத்த ஊக்கத்தால் மாணவர்களுக்கு ஏற்ற மாதப்பத்திரிகையாக மாறிவிட்டேன்.
தமிழரசி!

இன்பம் பொங்கும் இதயத்துடன் பொங்கல் தினத்தன்று பொலிவுடன் தங்கள் பாதங்களில் சமர்ப்பிக்கப்படுகின்றேன். தங்கள் கருணையன்றி வேறு ஒன்றும் அறியேன். "என்னை ஆசீர்வதியுங்கள்" என்றான் வெற்றிமணி, "பொங்கல் தினத்தன்று கிடைத்தற்கரிய பரிசு நீ" என்றாள் தமிழரசு.

## நன்றிதெரிவிக்கின்றோம்

வெற்றிமணி ஆண்டுமலருக்குக் கவிதைகள், கட்டுரைகள் அனுப்பிய பெரியார்களுக்கும், அழகாக அச்சுவேலையை செய்துதந்த அச்சகத்தாருக்கும், நன்றி தெரிவிக்கின்றோம். தொடர்ந்து கட்டுரை கதை, கவிதைகள் அனுப்புமாறும் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

## வேண்டுகின்றோம்

மாணவர்களின் நன்மை கருதியே மாணவர் மன்றம் ஆரம்பிக்கப்பட்டது. ஆகவே பாடசாலைத் தலைமையாசிரியர்களும், ஆசிரியர்களும் மாணவர் மன்றத்தில் தங்கள் மாணவர்களைச் சேரும்படி செய்தல்வேண்டும். பாடசாலைகளில் கல்விகற்றுக் கொண்டிராத பலர் மாணவர்மன்றத்தில் அங்கத்தவர்களாகச்சேர விருப்பம் தெரிவித்துள்ளனர். எனவே 20 வயதிற்குட்பட்ட எவரும் மாணவர் மன்றத்தில் அங்கத்தவர்களாகச் சேரலாம். ஆனால் கட்டுரைப்போட்டிகளில் பாடசாலை மாணவர்களே பங்குபற்றலாம். மாணவர்களுக்கு ஏற்ற விஷயங்களை எழுதியுதவும்படி ஆசிரியர்களை வேண்டுகின்றோம்.

—ஆசிரியர்

கவிதை

# உவகை தரும் பொங்கல்

...நீலாவணன்...

இளம் பரிதி எழிற் பரிதி
எழுந்த(து) அடி வானில்
வளந் திகழும் வயல்களெல்லாம்
விளைந்த கதிர் காணிர்!

❊

பயிர் விளைந்து பயன்வழங்க
பானையிலே பொங்கல்!
உயிர்கழித்தான் உழவன் அந்த
உவகை தரும் பொங்கல்!

❊

உழைத்தவர்கள் உளமகிழ்ந்தார்
ஊரெல்லாம் பொங்கல்!
மழைக்குதவி புரிந்த கதிர்
மனங்குளிரப் பொங்கல்!

❊

பசும் பாலும் பச்சரிசும்
பயறும் ஒன்று சேர்த்து
விசும் புயரும் வெய்யோனை
வேண்டுதல் செய் பொங்கல்!

கரும்பு செந்தேன் கனிவகைகள்
கற்கண்டுப் பாகில்
விரும்பி நமது தமிழர் தமது
வீட்டில் வைக்கும் பொங்கல்!

❊

பட்டாசு வெடி வெடித்துக்
கட்டியங்கள் கூற
பட்டாடை கட்டி நாங்கள்
பவனி வரும் பொங்கல்!

# வாழிய பொங்கல்

(கே காமராஜன், மதுரை)

அன்பே! தமிழரசி! அழகின் திருஉருவே! ஆர்வத்தின் குன்றே! பேசும்பொற் சித்திரமே! வளமையழகி! வனிதையர் திலகமே! மின்னலிடையாளே! அன்னநடையாளே! தங்கத்தின் குன்றே! தன்னலமில்லாத தண்ணளியாளே! ஏன் தேம்புகின்றாய்? இது என்ன? உன்னைப் பார்க்கும்போது பரிதாபமாயிருக்கின்றதே! கார்மேகம் போன்ற உன் கூந்தல் கலைந்துகிடப்பதேன்? செந்தாமரையையொத்த உனது அமுதவதனத்திலிருந்து கண்ணீர் அருவியென வழிந்துகொண்டிருப்பதேன்? எங்கே உனது வீரநடை? எங்கே உனது குயில் கீதம்? அத்தனையும் அழிந்துபட்டனவா? இரத்தக்கண்ணீர் வடிக்கின்றாயா? கல்தோன்றா மண்தோன்றாக்காலத்தே தோன்றிய தமிழ். அழிந்துபட்டு, இல்லை, அணு அணுவாக அழிக்கப்பட்டு வருகின்றதே என்றா? உம்! ...நீ மட்டும் என்ன? தமிழுணர்ச்சியுள்ளவர்கள் அத்தனைபேரும் புலம்புகிறார்கள் தங்கமே! ஏன்? இந்தச்சிறுவனாகிய நான்கூடத் தேம்புகின்றேன். அழகே!

தமிழரசி! அழகு நிலவே! இந்தப் பொங்கல் திருநாளன்று உனக்கு ஒரு நிகழ்ச்சியைக் காட்ட ஆசைப்படுகின்றேன். சற்று உன் சோகத்தை விலக்கி என்சொல் கேளீர்! பொங்கல்விழா! உழைத்து உழைத்து உதிரம் கொட்டியவர்களின் உழைப்பிலே ஒளிவீசிடும் ஒப்பற்ற நாள்! நரம்புதேய கபிலையுடன் போராடியவனின் வாழ்விலே வளமை கொழிக்கும் ஓர் ஜோதிநாள். இன்பமென்றறியாத அவர்களது வாழ்வுவனத்திலே, ஓர் வசந்தகாலம். கடலிலே கலம் செலுத்துவோன் முதல் அரஹரா...... பாடும் ஆண்டிவரை உயிரளித்துக் காப்பது யார்? ஆண்டவனா? இல்லையே! அழகுச் சித்திரமே! அமுத கலசமே! மீன்விழியாளே! என்று வர்ணித்த கவிஞர் “பசி” வயிற்றைக் கிள்ளியதும் போதைப்புலம்பலை நிறுத்திவிட்டு. போதை விழியாளை மறந்துவிட்டு ஓடுகிறானே! அவன் பசியை அடக்கியது அவளா? அல்லது அவனது கற்பனையா? இல்லையே! வெண்ணுரை கக்கி பொங்கி வழியும் பொங்கலும், வீர

வீரத்தின் காவலன்போன்ற கரும்பும் சர்க்கரையும், அன்புக்குரலோடு அது பொங்தும் பொலிவும் நம்மைப்பரவசப் படுத்துகின்றது. கதிரவனின் புதுநகைகண்டு மார்கழிப்பனி ஓட்டம் பிடித்தது இந்த நாட்டிலே திருவிழாக்களுக்குக் குறைவில்லை. குப்பைமேடுபோலக் குவிந்து கிடக்கிறது. அதிலே கிடக்கும் வைரக்கல்தான் பொங்கல்விழா! திருவிழாவின் பெயரால் தீந்தமிழ் மக்களின்மீது அறியாமை எண்ணெய்யை அறியாதுபோலக் கொட்டிவிட்டு அவர்களை எறும்பென்றெண்ணி சாத்திரத்தின்பேரால் வசப்படுத்தத் துடிக்கும் எத்தர்களின் முகமூடி கழித்தெறியப்படும் நாள்! பாடுபடும் உள்ளங்கள் பாக்கள் இசைக்கும் நாள்,

இந்நிலையிலே, முகத்திற்குப் பவுடர், ஸ்நோ, கண்ணுக்கு மை, கழுத்துக்கு வைரமாலை, காலிலே சிலிப்பர், கையிலே காலி (**Empty**) பிளாஸ்டிக் பையானாலும் சுழலும் விசித்திரம்! உதட்டுக்குச் சாயம்; உல்லாசத்துக்கு "பியூக்"கார், போனிக்ஸ் விசிறி நகத்துக்கு க்யூடெக்ஸ் கூந்தலுக்கு ஹேர்ஒயில், மனதிலே வஞ்சகம் "வளர்பிறை" போலிருந்தும் அதைமறைக்க வார்தாமுலாம் மிதியடிகூட தேய்ந்துவிடாமலிருக்க வீட்டிற்குள்ளும் ரத்தினக்கம்பளம். நடப்பது கேவலமென்று "ரிக்ஷா"வில் செல்லும் திமிர் பிடித்தபோக்கு! வீண் மமதை! இத்தனை உல்லாசங்களும் யாருக்கு? விவசாயிக்கென்று எண்ணுகிறாய் தங்கமே! அதுதான் இல்லை! பதவிவெறியால், பண்ணை இழந்து போகப் போக்கியத்திலே புரளும் புரட்டர்களுக்கு! எத்திப்பிழைக்கும் எத்தர்களுக்கு!

40 கோடி மக்களில் 4–கோடி பேர்களாவதுஇன்று நல்வாழ்வு நடத்துகிறார்கள் என்பது சந்தேகமே. இன்னும் கேள் அழகே! –வாழ்ந்துபட்ட சமுதாயத்திலே வீழ்ந்துபட்ட வேதனை உருவங்கள்! வெடிக்கும் பூகம்பங்கள்! குமுறும் எரிமலைகள்! நடமாடும் அதிர்ச்சி உருவங்கள்! அழகான சோலைதனிலே ஆவேசத்தின் கோரத்தர்பார்! அதனால் சிதைக்கப்பட்ட மலர்கள்! சிரிக்கின்றன நம்மைப் பார்த்து.

விளங்கவில்லையா வேல் விழியாளே! வீதிகளிலே, தெருக்களிலே, தெருக் கோடியிலே, சமைத்துண்டு சாக்கடை யோரங்களிலே சயனிக்கும் உருவங்களைப்பார்! அதேநேரம் பன்னீரும் பழரசமும் பருகி மஞ்சத்திலே மதுரகீதம்பாடும் மதோன்மத்தனையும்பார்! காற்றும் தூசியும் தாக்கி வேதனைப்படும் சின்னஞ்

சிறுர்களேயும், அவர்களது கண்களிலே வேதனேயின் விஷஊற்று வடிவதைப் பார்! அதே சமயத்தில் கோவில், மதம், கடவுள் என்ற பெயரால் சிங்காரமாக வாழும் தியவர்களேப்பார்!ஒடிந்த குடிசைகள் உடைந்த பாண்டங்கள்! ஓலக்குரலெழுப்பும் உருவங்கள்! அதே நேரம் அதைப் பரிகசிக்கும் பண்புகெட்டவர்களேயும் பார்! பாவையே! ஐயோ! இந்தமங்களகரமான நாளிலுமா? என்று எண்ணுகின்ருயா? இப்போதுமட்டுமல்ல! எப்போதும் வாழ்பவன் வாழ்கின்ருன் வஞ்சகத்துடன்! வஞ்சகமில்லாதவன்வாழ முடியாதவனுக ஆக்கப்படுகின்ருன். அன்பின் திருவுருவே! தமிழரசி! கேட்டாயா? சோகக்கதையை! இவ்வளவுதான் என்றெண்ணிவிடாதே! எழுதிஞல் ஏடு கொள்ளாது அன்பே!

"தம்பி நான் வாழவிரும்பவில்லே!..."

யார்? என் தமிழரசியா இப்படிச்சொல்வது? சிவபெருமான் என்றுகாட்டியும் சித்தம் தடுமாருமல் சீரியகருத்துக்களே வாரியிறைத்து நக்கீரனுல் போற்றப்பட்ட புரட்சிப்பாவையா இப்படிச்சொல்வது? செல்வி! நீ இல்லாத வாழ்வு எனக்கேது? எத்தனே ஜீவனற்ற மொழிப்பாவைகள் சிங்காரித்து என்னே மயக்கப்பார்த்தாலும் உம் அழிகிய உருவத்திற்கு அவை ஒப்பாகுமா?

அன்பே! இன்னென்று ஆயிரமாயிரம் தமிழ்த் தம்பிகளேயும் கோடிக்கணக்கான ஆர்வத்தின் பிறப்பிடம், துடிப்பின் எதிரொலி, பீடுநடைபோடும் பத்மராஜாக்களேயும். கருத்துச்சுவைகண்ட. கண்ணியமிக்க கணக்கற்ற கன்னியப்பர்களேயும் உருவாக்குவேன்! உனக்காக! உன் அழகிய விழிகள் கண்ணீரால் கனத்துப்போகாமலிருப்பதற்காக! கயவர்களின் கொட்டத்தை அடக்குவதற்காக! இது உறுதி! அன்பே! நீ அழியக்கூடாது! சாரமற்ருேர் அன்பில்லா அரக்கர்கள் அழியட்டும்,

ஆணவம் அடக்கப்படவேண்டும்! எம் சிந்தைக்கினியாளாகிய தமிழ்ப்பாவையே! நீ வாழத்தான் வேண்டும்! இல்லேயேல் ஒவ்வொரு தமிழ் உள்ளத்திலும் வெந்தனலேப்பாய்ச்சிவிடு. எல்லோரும் வெந்துமடியட்டும்! விருப்பமிருந்தால்வேற்ருர் விலாவெடிக்க நகைக்கவேண்டும் என்று நீ விரும்பினுல் அதன்படி செய்! செய்!

"அன்பரே! சோதனேக்குத்தான்!..."

உம்-சோதனே கூட எனக்குச் சுகந்த மண்டலம் ராணி!

"உம். அவசரம் கூடாது! இன்னும் உங்கள் கடமையை நிறைவேற்றவில்லே! ஞாபகமிருக்கட்டும்!"

"அமிர்தமான வார்த்தை!..."

"சரி! சரி! நேரமாய்விட்டது! போங்கள் சீக்கிரம். தம்பி தங்கைகள் உங்களைத் தேடிக்கொண்டு இங்கே வந்துவிடப் போகிறார்கள்,

"அன்பரசி! உம்மோடு எத்தனை ஆண்டுகளாயினும் பேசிக்கொண்டிருக்கலாம் போல்......"

"அதெல்லாம் அப்புறம்! உம்! போய் உங்கள் கடமையைக் கவனியுங்கள். வருகிறேன்,—வாழிய பொங்கல்! என்றாள் தமிழரசி, ஏதோ ஒரு மாதிரியான ஓசைகேட்கத் தொடங்கியது. விண்ணை நோக்கினேன், தமிழரசி வானவீதியிலே பறந்துசென்றுகொண்டிருந்தாள்! கற்சிலையான நான் கண்விழித்துப்பார்த்தும் என்னையுமறியாமல் என்வாய்! "வாழிய பொங்கல்! என்று முணுமுணுத்தது.

வாழ்க பொங்கல்!—வணக்கம்.

---

## குடிகாரக்கோவிந்தன்

கோவிந்தனின் வருகைக்காகக் காத்துக்கொண்டிருந்த கருப்பாயியின் கண்கள் பூத்துப்போய்விட்டன. அவளுடைய ஐந்துவயதுக் குழந்தை தூங்கிக்கொண்டிருந்தாள். கோவிந்தனைத் தன் வழிக்குத் திருப்பலாம் என்ற எண்ணத்துடன் அவனுக்குப் பிடித்த தின்பண்டங்களைச்செய்துவைத்திருந்தாள். கருப்பாயி ஆனல் அவன் இன்னும் வரக்காணேமே.

பல முறை பார்த்து அலுத்தவள் வாசலண்டை எட்டிப் பார்த்தாள், அடுத்தவீட்டு மாரிமுத்துவுடன் தெருவில் தள்ளாடியவண்ணம் வந்தான்கோவிந்தன். அவளுக்குத் துக்கம் பீறிட்டது. தலையில் அடித்துக்கொண்டு போய்ப் படுத்துக் கொண்டாள் கருப்பாயி. தான் குடிப்பதில்லையென்றும் தன் குழந்தைக்குத் தீபாளிக்குத் துணி வாங்குவதாகவும் கூறியிருந்தான் கோவிந்தன். ஆனல், இன்றோ......

குடியின் கும்மாள ஒலியுடன் குடிசையின் வாசலில் வந்து "கருப்பாயி! தூங்கிவிட்டியா? என்று அதட்டியவண்ணம் அவளருகில் நெருங்கினான்; அவள் துக்கத்தை அடக்கிக்கொண்டு "அத்தான்! ஏன் இவ்வளவு நேரம் ஆயிடுச்சு" என்றாள்,

இன்றைக்கு ரொம்ப ஜோராயிருக்கிறயே! என்று மோவாய்க் கட்டையைப் பிடித்துஆட்டினுன். அவன் வாயிலிருந்து மதுநாற்றம் வீசியது, அவள் தன் அருவருப்பை அவனிடம் காட்டா வண்ணம் எழுந்து அவனுக்கு உணவைக் கொடுத்து விட்டுப் பக்கத்திருந்தாள். இன்றைக்கு ஏதாவது கொண்ணுந்திச்சியா?

என்ன அது?

நான் சொன்னதை மறந்துட்டியா? நாளைக்குத் தீபாவளி– நமக்கு நாலுபோயிடுச்சு. இது ஒண்ணுதான் ஒட்டியிருக்கு. அதற்காவது ஓர் புதுத்துணி வாங்கலாமென்ருல்?

அவள் சொல்லி முடிக்கு முன் அவன் முறைத்துப் பார்த்து அவள் கன்னத்தில் அறைந்தான். அவள் சீற்றத்துடன் சட்டென்று எழுந்து. குடித்து விட்டு வந்து ஏறுமாருக அடிக்கத்தான் தெரியும் உனக்கு, வேறு எதுதான் தெரியும்? என்று கூறியதும் கண் மூக்குப் பாராமல் அடித்தான் கோவிந்தன். தன் குழந்தையையும் எடுத்துக் கொண்டு வெளியே ஓடினுள் கறுப்பாயி– மதுவின் மயக்கத்தால் கோவிந்தன் மண்ணில் வீழ்ந்து தூங்கினுன்.

காலையில் கணவனுக்குப் பழைய சோற்றைப் போட்டு வைத்து விட்டுக் குழந்தைக்கும் சிறிதுகொடுத்து விட்டு, கோவிந்தன் எழும்பு முன் தன் எஜமானியின் வீட்டுநப் போனுள் கருப்பாயி– எஜமானி வீட்டுவாசலில் குழந்தைகள் புதுப்புதுஆடைகள் அணிந்து பட்டாசு கொளுத்தி விளையாடுவதைக் கண்டதும் கறுப்பாயியின் மகன் அம்மா எனக்கு ஒன்றும் வாங்கித்தரவில்லையே என்ருன். அப்பா உனக்கு வாங்கித்தருவார் என்று கூறிச்சமாதானப்படுத்திருள் கருப்பாயி,

பின் கறுப்பாயி வாசலில் கோலம் போட்டு விட்டு வீடுகளைப் பெருக்கிப்பாத்திரங்களைத்தேய்த்தாள். பிறகுதான் குழந்தைவாசலில் பிள்ளைகளுடன் என்ன செய்கிருன் என்பதை அறிய வாசலுக்குப் போனுள். அங்கே எஜமானி தன்குழந்தைக்கு அணிந்தசட்டையைப் போலத்தன் மகனுக்கும்அணிந்து கொண்டிருந்தாள். கறுப்பாயிக்குச் சந்தோஷம் பொறுக்கவில்லை. ஆனுல் உள்ளூரத்தான் கட்டிய கணவன் தன் பிள்ளைக்கு ஒன்றும் வாங்கிக்கொடுக்காது குடிக்குப் பணத்தைக் கொட்டுகிருரே என எண்ணிமனம் வெடித்தாள். கறுப்பாயி எல்லாவேலைகளையும் செய்து முடித்து விட்டு எஜமானி யிடம் சென்ருள். ஈஜமானி கறுப்பாயின் நற்குணங்களுக்கும் பொறு

மைக்கும் பரிசாக ஓர் புடவையும் ஜாக்கெட்டும் கொடுத்து அத்துடன் ஆறு ரூபாவும் கொடுத்தாள். கறுப்பாயி எஜமானிக்கு வணக்கம் செலுத்தி. அதைப் பெற்றுக்கொண்டு வீடு திரும்பினாள் குழந்தையுடன், கறுப்பாயி எஜமானியின் திவ்விய குணங்களையும் தன் கணவனின் தீயகுணங்களையும் எண்ணி மனம் புழுங்கினாள். எஜமானிகொடுத்த பணத்திற்குப் பலகாரம்செய்வதற்கு வேண்டியவற்றை வாங்கிக்கொண்டுபோனாள். கணவன் வருமுன் பலகாரங்கள் செய்து குழந்தைக்கும் கொடுத்து விட்டுக் கணவனை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

கோவிந்தனும் மாரிமுத்துவும் குடித்து விட்டுத் தெம்மாங்கு பாடியவண்ணம் வந்தார்கள். கறுப்பாயிக்கு வேதனை தாங்க முடியவில்லை. கடவுளே! நீ தான் காப்பாற்றவேண்டும் என்று மனத்தில் எண்ணிக்கொண்டாள். கோவிந்தன் வந்ததும் தைரியத்துடன் பலகாரத்தைக் கொண்டு போய் அவன் முன் வைத்தாள்– முகத்தைப் பார்த்தாள். முகத்தில் ஒரு புதுமாற்றத்தைக் கண்டாள். கறுப்பாயி! என்னை மன்னித்துவிடு. "நான் மகாபாவி! அடித்தபின்பும் எவ்வளவு அன்போடு இவற்றைச் செய்துவைத்திருக்கின்றாய்." இன்றுதொடக்கம் யான் குடிக்கவே மாட்டேன், இதுதான் எனது தீவாளிப்பரிசாகும் என்றான்" கறுப்பாயிக்கு இதிலும் மேலான பரிசு எதற்கு.

காங்கேசன்துறை — செல்வி க. கமலாதேவி


# பக்டாட் ஹோட்டல்

7, கொத்மலி வீதி, நாவலப்பிட்டி

பலவகையான சிற்றுண்டிகளையும்
ருசித்துப்பார்க்க விரும்பினால் எமது ஹோட்டல்களுக்கு
விஜயஞ்செய்யுங்கள்.

**புரியாணி, கேக் மற்றும் தின்பண்டங்கள்**
**ஆடருக்கும் செய்து கொடுக்கப்படும்**

கே. பி. மூசா
மானேஜர்

பின்வருமிடங்களில் எமது கிளைஹோட்டல்கள் உண்டு.

முஸ்லீம் ஹோட்டல்
கினிகத்தேன

நியூ பம்பே ஹோட்டல்
9, அம்பகமுவ ரோட் நாவலப்பிட்டி

# பெரியர் அந்தணர்.

(பண்டிதர்—வ. நடராசா)

ஸ்ரீ இராமனுக்கு முடிசூட்டுவதென்று தசரதர் தீர்மானித்து விட்டார். அதற்குக் குலகுருவாகிய வசிட்டர், மந்திரிமார் முதலியோரது அங்கீகாரம் கிடைத்துவிட்டது. எனவே தசரதர் ஸ்ரீஇராமனுக்கு இராமபட்டாபிஷேக வரலாற்றைக் கூறி. வசிட்டரிடம் உறுதிப்பொருளை இராமனுக்கு உணர்த்தவேண்டியமையும் தெரிவித்தார். வசிட்டர் இராமனுக்கு.

"கரிய மாலினும் கண்ணுத லானினும்
உரிய தாமரை மேலுறை வானினும்
விரியும் பூதமோ ரைந்தினும் மெய்யினும்
பெரியர் அந்தணர் பேணுதி உள்ளத்தால்"

என உறுதிப் பொருளை உணர்த்தஆரம்பித்தார்.

[மால்—விஷ்ணு; கண்நுதலான்-நெற்றிக்கண்ணையுடைய உருத்திரன்; தாமரைமேல் உறைவான்—தாமரைப்புஷ்பத்தின் மேல் உறைபவனுகிய பிரமன்; விரியும் பூதம்—விரிந்து பல்வேறு உருவம் பெறுகின்ற ஆகாய முதலிய பூதங்கள்; மெய்—பரம் பொருள்; பேணுதி—வழிபடு]

'அந்தணர்; பிரமா, விஷ்ணு, உருத்திரன் முதலிய மும் மூர்த்திகளைப் பார்க்கினும்; பஞ்சபூதங்களைப் பார்க்கினும், பரம் பொருளைப்பார்க்கினும் பெரியர் ஆவர். ஆதலால் பிராமணர்களை நீ மனத்தால் வழிபடுவாயாக என்பது பொருள்,

பிராமணர்கள் மும் மூர்த்திகளைக்காட்டினும், பரம் பொருளைக் காட்டினும் பெரியரா? இது பொருந்துமா? வசிட்டன்பிராமணராதலின் ஸ்ரீஇராமனுக்கு இங்ஙனம் உபதேசம் செய்தனரோ? என, இப் பாடலைப் படித்தவுடன் யாவரும் எண்ண நேரிடும். இது பொருந்துமா? ஆராயத்தக்கதே!

"பரிபாடல்" என்பது ஒரு இலக்கிய நூல் இது சங்காலத்து நூல் அந்நூலில் "முருகவேள்" "திருமால்" முதலிய கடவுளர் வாழ்த்தும், காதல் பற்றிய பாடல்களுமாகப் பலபாடல்கள் இருக்கின்றன. அவற்றுள் திருமாலைப்பற்றிய ஒருபாடலில் பின்வரும் வரிகள் இருகின்றன

"நின்னில் தோன்றிய நிரையிதழ்த் தாமரை
அன்ன நாட்டத்து அளப்பரியை
நின்னிற் சிறந்த நின்தாளி ணையவை."

திருமாலைப் புகழ்ந்த புலவர் இப்பகுதியின் முதலிரண்டு வரிகளிலும் திருமாலினது கண்ணின் பெருமையைக் கூறியிருக்கிறார்– திருமாலின் தொப்பூழிலிருந்து தோன்றியது ஒரு தாமரைப்பூ, அப்பூவினின்றே பிரமன்தோன்றினான், அத்தாமரைப்பூப் போன்ற கண்களையுடையாய் என்பது முதலிரண்டு வரிகளின்பொருள் (நாட்டம்–கண்

மூன்றாவது வரியில் இறைவனை விட இறைவனது தாள்கள்—பாதங்கள்சிறந்தவை எனக் கூறப்பட்டிருகிறது. "நின்" என்றது இறைவனை. தாள்–பாதங்கள்; "இறைவனே நினது பாதங்கள் நின்னினும் சிறந்தவை. அத்தகைய சிறந்த பாதங்களை உடையாய்" என்பது மூன்றாவது வரியின் கருத்து,

இறைவனைவிட–இறைவனைப் பார்க்கினும்–இறைவனது பாதங்கள் சிறந்தனவா? எங்ஙனம்?

அந்தணர், கடவுளர் மூவரினும் சிறந்தவர் என்பது போலத்தானே இதுவும் இருக்கிறது பரிபாடலுக்கு உரை எழுதிய பரிமேலழகர் இவ்வரிக்கு விளக்கம் கூறும் போது "வீடளிக்குங்கால் நின்னினும் சிறந்த தாளிணை களையுடையை" என விளக்கம் கூறுகிறார்.

வீடு–மோக்ஷம், நமக்குமோக்ஷம் எது? இறைவனது பாதங்களை திருடிவகளே ஆகும்; ஆகவே நாம்அடையக்கூடியபேறுகளுள் சிறந்தது இறைவன் பாதாரவிந்தங்களே ஆகும். ஆகவே, நமக்கு–மனிதர்களுக்கு இறைவனது பாதாரவிந்தமே, இறைவனதுமற்றைய திருவங்கங்களினும் சிறந்ததாதல் இயல்பு–இதனையே, பரிமோலழகரும்"வீடளிக்கும் கால் நின்னினும் சிறந்த தாளினைகளையுடையை எனக்கூறிப்பிட்டார். இறைவனது திருவங்கங்களுள் அவர் திருப்பாதம் குறைவுடையதாகலாம், ஆயினும் திருவடிகளையே பெரும் பேறாகக் கருதும் நம்மனோர்க்கு இறைவனது பாதமன்றி மற்றையன சிறப்புடையனவாகா. இதனைப் போலவே "கரியமாலினும்" என்னும்இராமாயணப் பாடலுக்கும் பொருள் கூறுவது பொருத்தமாகும்,

அந்தணர்–அந்தத்தை அணவு வோர்– வேதாந்தத்தையே மேற்கொண்டு உலகிற்கு உணர்த்துவோர் நமக்கு இறைவனையும். இறைவனைப் புகழ்ந்து கூறும் வேதங்களையும் விளக்கிக் கூறி இறைவனை அடைய நமக்கு வழிகாட்டுவோர் அந்தணர்–எனவே இறைவனை

அடையவழி காட்டும் அந்தணர்- மந்திரவேத வல்லுநர்- எமக்கு இறைவனிலும் பெரியராவர்; இறைவனது தாள் இறைவனிலும் சிறந்தமைபோல- இது போன்றதே" எழுத்தறிவித்தவன் இறைவனாவான்" என்ற கூற்றும்.

அந்தணர் இறைவனிலும் பெரியராகத் தோற்றும் சமயமும் உண்டு. அது இறைனைப்பற்றி அவர்கள் நமக்கு உணர்த்தும் சமயம் ஆகும்என்பது, இது உபசாரவழக்கு


# பேபி ஸ்டோர்ஸ்,

— பிரபல வியாபாரம் —

41, கொத்மலி வீதி நாவலப்பிட்டி

எங்களிடம்

சகலவிதமான சாப்புச் சாமான்கள், அப்பிள் கிரேப்ஸ் பழவகைகள் பிஸ்கட் தினுசுகள் யாழ்ப்பாணம் திறம் சுருட்டு.

நல்லெண்ணெ, கிளாஸ் ரப்பர்வளையல்தினுசுகள்



சகாயமான விலைக்குக் கிடைக்கும்



සාප්පු බඩු පලතුරු වර්ග
රබර් වළලු
යාපනේ පිරිසිදු
තලතෙල්
පහසු මිලට
සපයනු ලැබේ.

# බේබි ස්ටෝර්ස්.

41 කොත්මලේ පාර — නාවලපිටිය.

நாட்டுப்பாடல் "சுப்பு"பாணி

# "பிஞ்சு" நினைவுகள்.

1. பட்ட மரத்துல கம்பொடிச்சிச் - சிட்டுப்
பட்சியப் போலநான் வீடுகட்ட - கோழி
முட்டையின் கோதுள்ளே சோறுபொங்கி - நீயும்
மூணு விரலால தீத்திடுவாய்...

2. காட்டுக் கொம்பன் யான கூச்சலிட - என்னக்
கட்டிப் பிடிச்சையோ! அத்தானென்பாய் - நம்ம
பாட்டியப் போல நடுங்கிடுவாய்; - வீர
பாண்டியன் போல் நானுந் தேற்றிடுவன்

3. அல்லிக் குளத்தில் விரிஞ்சிநிக்கும் - பூவை
ஆவல் கொண்டே நீயும் பார்க்கயிலே - நான்
துள்ளிக் குதிச்சோடி நீச்சலிட்டே - எட்டாத்
தொம்பலில் நிண்டு தவிச்சிடுவன்...

4. தூண்டிற் புழுவாத் துடிதுடிச்சிச் - சேலத்
தொங்கல என்கைக்கு வீசியதும் - அதை
வேண்டிப் புடிச்சிக் கரையடஞ்சிப் - பெரும்
வீரனப் போல நடிச்சிடுவன்...

5. மொட்டு விரிஞ்ச மலரானுய் - காவற்
கட்டினுள் சிக்கிய பேடானுய் - நான்
செட்டமுறிஞ்ச குயிலானேன் பட்டிச்
சேரியில் நிண்டுன்னக் கூவிடுவன்

6. ஊணு உறக்கம் மறந்திடுவன் - உன்னக்
காணும மேனி மெலிஞ்சிடுவன் - பூவில்
தோணு மழகுப் பொருட்களிலே - எந்தன்
தோகை மயிலுனைக் கண்டிடுவன்


7. கொல்லப் புறத்தி லொழிஞ்சி நிண்டு - சேவல்
கோழியப் போலநான் கூவியதும் - அந்தக்
கள்ள வழியால புள்ளிமான்போல் நீயுங்
துள்ளி குதிச்சோடி வந்திடுவாய்...

8, கொல்லைக் கனியாக நீயிருப்பாய் - அதக்
கொத்துங் கிளியாக நானிருப்பன் - அன்பு
வெள்ளத்தப் போல நீ ஓடிடுவாய் - அதில்
வள்ளத்தைப் போலநான் ஆடிடுவன்...


9. முல்ல மலராக நீ சிரிப்பாய் - மேலே
மொய்த்திடு வண்டாக நானிருப்பன்!
சல்லாப லாவக சுந்தரியே - இன்பச்
சாகரம் பொங்கி வழிகையிலே...

10 அத்தையள் எங்கோ ஒழிஞ்சிநின்டு - நம்ப
அன்புப் பிணைப்பினைக் கண்டுகொண்டு - தூய
பத்திர காளிக்குக் கையெடுத்தே - இந்தப்
பந்தனக் கட்ட முடிஞ்சிடென்றுள்.


"ராஜபாரதி" வி. கி, இராஜதுரை.




இ. நடராஜா (அ–இ 17)




ஏ-ஸீ–எம். இஸ்மத்துல்லா
(அ-இ. 21)




கே. பி. கனகராஜ் [அ. இ. 27.]



மு. சி. ஸ்ரீகாந்தன் [அ.இ 30]
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிகள்
விளையாட்டுப் போட்டியில் உயரப்பா
ய்தலில் 2-வது இடம்பெற்றவர்,



எம். பாரூக் [அ. இ. 4]



எம். எஸ். குமார் [அ. இ. 28.]



ஆர். ஆறுமுகம், (அ–இ. 1)



த. நாகரத்தினம் (அ–இ 2)

# எண்ணம் உயரவேண்டும்

(ஆ. இராசரத்தினம்)

மனிதர்களுக்குத்தான் சிந்தித்து ஒழுகும் சக்தியுண்டு. ஆனல் மிருகங்களுக்கு அந்த சக்தியில்லை. இது கடவுளின் நியதி. மனிதன் பூமியில் பிறந்தநாள்முதல் இறக்கும்வரை அவனுடையசிந்தனைசக்தி காலத்திற்குக் காலம் பராயத்திற்குப் பராயம் வளர்பிறைபோல் வளர்ந்து கொண்டுதான் வருகின்றது இந்தச் சிந்தனை சக்தியின்மேன்மையால்தான் அனுவளவாகிய ஊசிமுதல் அகிலத்தை அழிக்கும் அணுக்குண்டுவரை கண்டுபிடித்திருக்கிறார்கள் விஞ்ஞானிகள்.

உயர்ந்த எண்ணம் இருந்துவருவதினுற்றான் விஞ்ஞானிகளும் ஆராய்ச்சியாளர்களும் மற்றும் கலாவல்லுனர்களும் தாங்கள் கண்டுபிடித்த நவீன சாதனங்களின் வரலாறுகள், விபரங்கள் அவைகளை உபயோகிக்க வேண்டிய முறைகள், அவற்றால் அடையக்கூடிய பயன்கள் ஆதியவற்றை ஒளிவுமறைவின்றி நூல்வடிவில் எழுதியிருப்பதோடல்லாமல், மற்றவர்களுக்கும் பயிற்சியளித்து, அவர்களையும் மேலும் மேலும் ஆராய்ச்சிசெய்வதற்குஊக்கம் அளித்து வருகின்றார்கள்.

பண்டைத்தமிழ்ப் பெரியார்கள் சிலர் அறிவு ஆற்றல். புலமை ஆயுதம்திறன் ஆகிய வன்மைகளிருந்தும் உயர்ந்த எண்ணம் இல்லாததினால் அவர்கள் ஆராய்ந்து. தெளிந்து, நுட்பமுடன் கண்டுபிடித்தவைத்தியம், சிற்பம், இசை, நாட்டியம் முதலியனவும் இன்னும் பலவிதமான சாதனங்களும் எழுதிவைக்கப்படாததாலும், பிறருக்குச் சொல்லிக்கொடுக்காததாலும் அவற்றை அறிந்தவர்கள் இறந்ததும், இருப்பவர்கள் அறிய முடியாதவையாகிவிட்டன. இவ்வாறு மறைத்து வைத்திருந்ததற்குக் காரணம்மற்றவர்கள் இந்நுட்பங்களை அறிந்தால் தங்களிலும்பார்க்க அதிகபுகழ் அடையக்கூடும் என்ற பொறாமையும் குறுகிய மனப்பான்மையும்தான், இவர்களைப்போல இந்த இருபதாம் நூற்றாண்டிலும் சில பிரகிருதிகள் இருக்கத்தான் செய்கின்றார்கள். அறிவுவளர்ச்சிக்கு இரும்புத்திரை போடுவதைப் போன்ற துரோகம் உலகில் வேறொன்றுமில்லை என்பதை அவர்கள் உணரவேண்டும்.

மனிதர்களிலும் மிருகத்தன்மை யுள்ளவர்களாகச் சிலர் வாழுகின்றார்கள், காமாந்தகாரத்தினால் பெண்களைப் பலவந்தமாகக் கற்பழித்து இப்பேதையர்களின் நல்வாழ்வைச் சீர்குலைத்துத் தங்கள் இச்சைகளைப் பூர்த்திசெய்யும் கயவர்களும் தங்களிலும் மெலியாரையும் வேலையாட்களையும் இம்சை செய்து துன்பப்படுத்தும் நீசர்களும் பலவித நூல்களைக்கற்றும் கற்றதினால் பெற்ற அறிவை ஆக்க வேலைகளுக்குப் பயன் படுத்தாமல் அழிவுத்தொழில்களுக்குப் பயன் படுத்தி யுத்தம் என்னும் போர்வையால் அப்பாவி மக்களையும் சீவராசிகளையும் கொன்றுகுவித்து வெற்றி முழக்கம் செய்யும் போர் வெறியர்களும் மனிதர்கள் தானா? இவர்களிடம் உயர்ந்த எண்ணம் உண்டா?

கற்றவர்களுக்குத்தான் கண்களுண்டு, கல்லாதவர்களுக்கு முகத்திலிரண்டு புண்களுண்டு என்று அழகாக எழுதியுள்ளார் வள்ளுவர் கற்றவர்கள் பெரும்பாலும் ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து கௌரவமாகவே வாழவிரும்புகிறார்கள். கற்றவனுடன் ஒரு மூடன் வலுச்சண்டைக்குப் போகும்பொழுது தனது மரியாதையைக் காப்பாற்றுவதற்குக் கற்றவன்சாத்வீகமுறையில் சண்டையை நீக்க எத்தனிக்கின்றான். இது அவனுடைய உயர்ந்த எண்ணத்தை எடுத்துக் காட்டுகிறது. ஆனால் கல்லாதவன் எதிர்ப்புக்காட்டி, பகையை வளர்த்து நீதிமன்றங்கள் ஏறி, பணத்தையும் விரயஞ்செய்து, சமூகத்தில் துஷ்டன் என்ற பெயரையும்பெற்று சில சமயங்களில் சிறைக்குஞ்சென்று கைதி என்ற அழியாத பெயருடன் வாழ வழி ஏற்படுத்திக்கொள்ளுகின்றான். காரணம் இவனிடம் உயர்ந்த குணம் இல்லாமையே!

ஒவ்வொரு மனிதனுடைய எண்ணமும் அவனுடைய சூழ்நிலைக்கு ஏற்றவாறுதான் வளர்ச்சியடையும். விஞ்ஞானத்தில்மேல் நாட்டவர் முன்னேறியிருக்கின்றனர். ஆனால் ஆத்மஞானத்தில் கீழ்நாட்டவர் முன்னேறியிருக்கின்றனர். விஞ்ஞானப்பாதையில் முன்னேறிச்சென்றும் அழிவுப்பாதையைக் கைக்கொண்டதால் ஹிட்லர், முசோலினி, நெப்போலியன் போன்ற வீராதி வீரர்களின் முடிவு என்ன? இவர்களின் செயல்களினால் கஷ்டமடைந்த மக்கள் எத்தனை இலட்சம்? இறந்தவர்கள் எத்தனைகோடி? உண்ண உணவின்றி உடுக்க உடையின்றித் தவித்தவர்கள் எத்தனையோபேர் இந்தவீரர்களிடம் உயர்ந்த எண்ணமிருந்தால்? ஆத்ம ஞானத்தில் முன்னேறிய கீழ்நாட்டு மக்கள் பண்பு, ஒழுக்கம், அன்பு ஆகியவற்றைக் கடைப்பிடித்து உயர்ந்த எண்ணங்களுடன் வாழ்வதால் எல்லோராலும் புகழப்படுகின்றனர்.

சிலர் வாழ்க்கையில் வெறுப்புக் கொண்டும், மனைவி மக்களைக் காப்பாற்ற முடியாமலும், உழைத்துச் சீவியம் நடாத்த முடியாத சோம்பேறித்தனத்தாலும், நீண்ட தாடியும் சடையும் வளர்த்துத் துறவறத்தைக் கைக்கொள்ளுகின்றார்கள். ஆனால், இவர்கள் வெளிப்பகட்டிற்காகத் தாங்களும் துறவிகளென்று, பசுத்தோல் போர்த்த புலிகளைப்போல் உலாவுகின்றார்களே! இவர்களிடம் உயர்ந்த எண்ணம் உண்டா?

உலகிலேயே உயர்ந்த எண்ணம் உடையவர்கள் எனக்கருதப்படும் மகான்கள் இராமகிருஷ்ணர், விவேகானந்தர், ஏசுநாதர், முகம்மது நபி, புத்தபிரான், மகாத்மாகாந்தி ஆகியோரும் உலகமெல்லாம் ஒன்று, மக்களெல்லோரும் ஒரு சமுதாயம், அவர்கள் நலனே தங்கள் நலனென்று, சொல்லியும், செய்கையிற் காட்டியும், வரும் நேருஜி, ராஜாஜி, ஆகிய பேரறிஞர்களும்தான். ஆதலால் அவர்களுடைய போதனைகளையும் சேவைகளையும் ஒவ்வொருவரும் சிந்தித்துக் கடைப்பிடித்து ஒழுகவேண்டும், அப்படியானால், உயர்ந்த எண்ணம் உதிக்கும் அப்பொழுது போட்டி, பொறாமை, கொடுமையாவும் நீங்கும். அன்பு, கருணை, ஒழுக்கம், சகோதரத்துவம், சமத்துவம் ஆகியன உண்டாகும். இவை ஒருவனுக்கு உண்டாகும்போது அவன் மாந்தருக்குள் மாணிக்கமாக மதிக்கப்படுகின்றான்.

மதிப்புரை:-

## மொழிப்பயிற்சி

- ஐந்தாம் புத்தகம் [ ஆறும் வகுப்பு ]

ஆக்கியோன்:- பண்டித வ. நடராஜன் அவர்கள்

பதிப்பு:- வட இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம்-சுன்னுகம்

விலை ரூபா. 1-20.

மத்தியவகுப்புகளுக்குப் போதிப்பதற்கு ஏற்ற மொழிப்பயிற்சி நூல் கிடைக்காததால், கஷ்டப்பட்டுவந்த ஆசிரியர்களுக்கு மொழிப்பயிற்சி என்னும் இந்நூல் சிறந்த துணையாகவிருக்கும். இக்காலத்திற்கேற்ப, சொல்லாக்கம், கதையாக்கம், பிழைதிருத்தம், ரகர, றகர, ழகர, ளகரபேதங்கள் விளம்பரங்கள் எழுதும் முறைகட்டுரைகள், அழைப்பிதழ்கள், எழுதும்முறைகள்யாவும் அடங்கியுள்ளன. மத்திய வகுப்பு மாணவர்கட்கு இந்த நூல் சிறந்தவழிகாட்டியாகவிருக்கும் என்பதற்கு ஐயமில்லை.

பரிசுக்கட்டுரை.

# மது விலக்கப்பட வேண்டும்

பஞ்சமா பாதகங்களில் ஒன்றான மதுபானம் மிகக்கொடிய நஞ்சாகும். இதுஉயிருள்ள அனைத்தையும் கொல்கிறது மது நரம்பு மண்டலத்தையும் இதர முக்கிய உறுப்புக்களையும் பாதிப்பதோடு. நம்மிலுள்ள வெண்சிவ அணுக்களையும் தாக்குகிறது என்று வைத்திய நிபுணர்கள் கூறுகின்றனர்,

அன்றியும் குடிகாரர் அறிவை அழித்து உடலை எரித்துக் கொள்வதோடு ஆன்மாவையும்நாசஞ்செய்துகொள்கின்றனர். இவற்றைக் குறித்து தமிழ் மறை" நஞ்சுண்பார் கள்ளுண்பவர்" என்று கூறிற்று

இன்னுமிக் கொடிய நஞ்சானது வேதனைகளையும் சண்டைகளையும் உண்டாக்கி விடுகின்றது. இதன் காரணமாக அனுதினமும் நடக்கும் கெடுதல்களுக்குக் கணக்கில்லை. மேலும் குடிகாரார் நாட்டின் நாகரிகத்துக்கு ஒரு களங்கம் போலிருக்கின்றார்கள். இவர்களது குடும்பங்கனின் துயர் அவஸ்தைகள் சொல்லிலடங்கா! குடிகாரரில் சிலர் தங்கள் சுகதுக்கங்களை மதுபானத்திலமிழ்த்தி விடலாம் என்று நினைக்கின்றனர். ஆனாலது இயலாதகாரியமென்பதைப் பிற்பாடுஉணர்கின்றனர், அதிகமாகக்குடிப்பதனால்இக்கெடுதல்கள் விளைகின்றன என்று எண்ணிவிடக்கூடாது. அதிகமோ! கொஞ்மோ: மதுபானம் மதுபானந்தான்.

மக்கள் இக்கொடியமதுவால் அனுபவித்தவைகளைக் கண்ணுற்ற மகாத்மா காந்தியடிகள் பாரத நாட்டில் மதுவிலக்குத் திட்டத்தை ஆரம்பித்தார். இன்று இந்தியாவில் பல மகாணங்களில் மதுவிலக்கு வெற்றிக் கொடியை நாட்டியிருக்கின்றது மேலும் அம் மாகாணங்களில் மதுவிலக்கினால் கஷ்டப்படும் மக்களுக்குஅரசாங்கம் வேண்டிய உதவி புரிவதோடு. குடிப்பழக்கம் கொண்டவரின் சோர்வை நீக்க ஆங்காங்கு முன்னேற்றப் பொழுது போக்கு வாசிகசாலைகளையும் வானொலிகளையும் அமைத்து உற்சாகம்ஊட்டிவருகின்றது. இந்நல்ல திட்டத்தை இன்று உலகின் பல தேசங்களும் கைக்கொண்டு அனுகூலமடைந்துவருகின்றன.

எங்கள் நாட்டிலோ! மரவரி ஒருபுறமும், சாராயவடிசாலைகள் மறுபுறமும் தவறணைகள் இன்னொருபுறமுமாகத் தோன்றி நாடு சீரழிந்து

கொண்டு வருகின்றது. ஆனுலிப்போது சட்ட மூலம் இதனைத்தடுக்க வேண்டும் என்று ஒரு ஆலோசனை கூறப்படுகின்றது.

நாட்டின் முன்னைய பிரதம மந்திரி திரு டட்லி சேனநாயக இதற்கு வேண்டிய ஆதரவைத் திரட்டிவருகிறுர், பலவந்தமாகத் தடுப்பதால் நிரந்தர நன்மைகள் உண்டாகா வென்றும் பிரசாரத்தினு லேயே மக்களைமீட்கமுடியுமென்றும் இன்னொரு ஆலோசனை கூறப் படுகிறது. இவ்விருவித ஆலோசனைகளும் நாட்டில் ஆவன செய்கின் றன. இதையன்றி மதுவிலக்குச் சபைகள் நாட்டின் பல்வேறு பகுதி களிலும் தொடங்கி அருந்தொண்டு புரிந்துவருகின்றன. இவைபற்றி யே பத்திரிகைகள் மும்மரமாகப் பிரசாரம் செய்து வருகின்றன அரசாங்கமும் மதுவிலக்குச் சபைகளை மனப்பூர்வமாக ஆதரித்துத் தன்னுலான உதவியளித்து வருகிறது இதன்பயனுக பல இடங்களில் தவறணைகள்மூடப்பட்டிருக்கின்றன. கூடியவிரைவில் மது முற்ருக நமது நாட்டை விட்டோடிவிடும் என்று எதிர்பார்க்கலாம். வருங் கால சமுதாயத்தின் வச்சுரத் தூண்களாகிய இன்றைய இளைஞர்கள் சிறப்பாக இத்தொண்டில் ஈடுபட்டு முன்னணியில் நின்று உழைக்க முன்வரவேண்டும். அப்போதுதான் நம்நாட்டில் பல பாகங்களிலு இன்பம் ஏற்படும்.

மதுபான வியாபாரம் கறையான் போன்று எல்லாவற்றையும் மழிக்கின்றது. நாம் அதை அழிக்க வேண்டும்" இது ஓர் அறிஞரின் அறிவுறையாகும்.

அர்ச்சூசையப்பர் பாடசாலை
திருக்கோணமலை.

தா. சுப்பிரமணியம்
(அ. இ. எண் 10)

# பொய்சொன்னாலும் பொருந்தச்சொல்

"இது என் பள்ளிக்கூட வாழ்க்கையின்போது நடைபெற்ற சம்பவம், மணி அடிக்க இன்னும் பதினைந்து நிமிஷங்கள் இருந்தன, பள்ளிக்கூடத்திற்குப் பக்கத்தே நானும் தோழியும் பேசிக்கொண்டிருந்தோம்;– தோழி "இன்று முருகன் தியேட்டரில் புதிசா ஒரு படம் ஓடுகிறது போகலாமா" என்றாள்.

"மெட்னி ஷோவா" வகுப்புக்குப் போகாமலே மத்தியானம் சினிமாவுக்குப்போனால் அப்ஸெண்ட் விழும், அதோடு என் தங்கைக்குத் தெரிந்தால் எங்கப்பாவிடம் சொல்லிவிடுவாளே" என்றாள்.

பத்மா "சும்மா வாடி, அதெல்லாம்எனக்குத்தெரியும், சாப்பிட்டதும் பள்ளிக்கூடத்திற்குப் போவதுபோல தியேட்டருக்கு நேராக வந்துடு என்றாள்,

நானும் பத்மாவும் பேசிக்கொண்டபடி மத்தியானம் தியேட்டரில் சந்தித்தோம், ஜோராக சினிமா முடிந்தது. மணி ஆறாயிற்று "பத்மா! வீட்டில்கேட்டால் என்னசொல்வது" என்றேன்.

"பூ முட்டாள்! இதற்குப்பதில்சொல்லத் தெரியாதா? வகுப்புமுடிந்தும் விளையாடிவிட்டு வாறேன் என்று சொல்வதுதானே? எப்படி என் யோசனை? என்றாள்.

"சரி அப்படியே சொல்லுகிறேன்" என்றுகூறிவிட்டுவீடுசென்றேன் வாயிலில் என் தந்தையும் தங்கையும் நிற்பதைக்கண்டேன், நெஞ்சு திக்என்றது, "ஏன் இவ்வளவு லேற்?என்று அதட்டினார் தந்தை.


வகுப்புமுடிந்ததும் விளையாடி விட்டு வாறேன் அப்பா! ஓகோ விளையாடிவிட்டுவாறாயா? உண்மையைச்சொல், எங்கேபோனாய் என்று கூறியபடி முதுகில் இரண்டு கொடுத்தார்.

"ஏன் இந்த வயதிலே பொய்! பள்ளிக்கூட அதிகாரிகளில் ஒருவர் இறந்ததை முன்னிட்டு மத்தியானம் லீவுவிட்டாச்சு என்று உன் தங்கைவந்துவிட்டாள், நீ வகுப்பு முடிந்து விளையாடி விட்டுவாறேன் என்கிறாய்" என்றார் தந்தை. எனக்கு என்ன கூறுவதென்று தெரியவில்லை. அடகடவுளே! நான் சினிமாவுக்குப் போகிறநாளிற்றான் லீவு விடவேண்டுமா? அதிகாரி இறக்கவேண்டுமா? என்று மெல்லக் கூறியபடி உண்மையைக் கூறினேன். தந்தையும் "பொய்சொன்னாலும் பொருந்தச்சொல்ல வேண்டும் குமாரி" என்றார்.


கொழும்பு "தமிழ்ப்பூங்கா"



செல்வி-கலாநிதி சுப்ரமணியம் [அ-இ. 32]
பாடசாலைப் பெற்றோர்விழாவில் கீழ்ப்பிரிவு
நடனத்தில் முதல் இடம் பெற்றவர்
வயது 6



எஸ், அல்பிரட் டீசில்வா [அ-இ 16]



இ-சிவானந்தம் [அ-இ 8] பாடசாலைப் பேச்சுப்போட்டியில் முதலாவது பரிசுபெற்றவர்



செல்வி கமலாதேவி [அ-இ 25]

## மாணவர் மன்ற அங்கத்தவர்கள்.

1 ஆர். ஆறுமுகம் பரி. அந்திரேயக்கல்லூரி—புத்தளம்
2 எச், சேகு இஸ்மெயில்—இல 8. மரைக்கார்தெரு, புத்தளம்
3 நொ. கா. நடனசபாபதி-சிவானந்தவித்தியாலயம்—கல்லடி உப்போடை
4 த. நவரத்தினம்- அ. த. பாடசாலை ஹிங்குலோயா மாவனல்ல
5 மு. கணேசலிங்கம்—அரசினர் மத்தியகல்லூரி வசாவிளான்
6 மு. பாருக் 39 கொழும்பு வீதி, கண்டி
7 கே—சி சோமசுந்தரம் — சிவானந்தவித்தியாசாலை, கல்லடி [உப்போடை
8 இ. சிவாநந்தன், கதிரேசன் கல்லூரி, நாவலப்பிட்டி
9 பி, சோமசுந்தரம்—அசோகமாணவர் விடுதி, கண்டி
10 தா. சுப்பிரமணியம், அர்ச்.சூசையப்பர்கல்லூரி, திருகோணமலை
11 சா. ஞானசுந்தரம். அ. த. பாடசாலை வெலம்பொடை
12 ஐ. எல். அப்துல் மஜீத் ,, ,,
13 செல்வி ஏ. எல். செய்தத்தும்மா ,, ,,
14 ஏ, எம். முகம்மது அரசினர் கனிஷ்டபாடசாலை வெலிகம
15 வீ. பத்மராஜா [தமிழ்ச்செல்வன்] டயகமகிழக்கு. அக்கரபத்தனை
16 எஸ், அல்பிரட் டீ சில்வா, அர்ச். மரியநாயகிகல்லூரி, சிலாபம்
17 இ. நடராஜா "கலைஜோதி" பாரதிபவன் —நாவலப்பிட்டி
18 ஏ, டபிள்யு. எம். அன்சார், சிரேஸ்டபாடசாலை, அலுத்துகம
19 இ. நடராசா சைவவித்தியாசாலை, 8—ம் வாய்க்கால் கிளிநொச்சி
20 ஏ. ஆர். எம். மக்லூப் 35 ஏ, ஹியூம்ரேட், காலி
21 ஏ—ஸி—எம் இஸ்மத்துல்லா- அ—த பாடசாலை வெலம்பொடை
22 க. பத்மநாதன்- சென்ற், யோசேப் கல்லூரி திரிகோணமலை
23 செல்வி ஸரீஹா ஹாஷிம் 22 குறுவை வீதி கொழும்பு
24 எம் வருதராஜ்—19 மெயின் வீதி அக்கரப்பத்தனை
25 செல்வி க. கமலாதேவி- பலாலிஅம்மன்கோவில் காங்கேசன்துறை
26 ஆர், இராசரத்தினம்—75 மெயின் வீதி பலாங்கொடை
27 கே' பி. கனகராஜ்—கிளாத்தோட்டம் கொட்டகலை
28 எம் எஸ். குமார்—சட்டன் பாடசாலை அக்கரப்பத்தனை
29 எஸ். பி. காந்திலால் கானூகா C/o எஸ். பிஜெயலால் கானூகா திண்டிவனம்
30 மு. சி. சிறீகாந்தன்-இந்துக்கல்லூரி—கொக்குவில்
31 செல்வி புஷ்பகுமாரி இரத்தினம் 24 பிச்சைக்குளரேட், முஸ்லிம்வீதி யாழ்பாணம்
32 செல்வி கலாநிதி சுப்பிரமணியம் அ-த. பாடசாலை வெலம்பொட

33 கே. காமராஜன்—தேவாங்கர் உயர் நிலைப்பள்ளி சின்னாளபட்டி-
மதுரை
34 செல்வி— சின்னத்தங்கம்-வல்லிபுரம் சைவவித்தியாசாலை உடுப்-
பிட்டி
35 மு. விசாகப்பெருமாள்—காட்டி கல்லூரி-பரித்தித்துறை
36 ஏ- எஸ்யோசேவ்-சம்பத்திராசிரியர் கல்லூரி-யாழ்ப்பாணம்
37 பி. எஸ், சதானந்தசர்மா இந்துக்கல்லூரி—யாழ்பாணம்
38 எம், முகமதுலாபீர். சஹீராக்கல்லூரி-கொழும்பு
39 பூ. சோமசுந்தரம்-அசோகாவித்தியாலயம் கண்டி
40 பி, சேதுரட்ணம்—அசோகாவித்தியாலம் கண்டி

## சிறுவர் போட்டி இல 8

பரிசு ரூபா 500— முடிவு திகதி 11-2-56

**வரக்கூடியவிடைகள்**

1 பாரி, காரி, ஓரி,
2 ராதை. சீதை, கோதை
3 உசி, ஓசி, சுசி, ருசி, பசி,
4 கல், உல், சுல், பால், ஆல்,
5 ஆசை, ஓசை, குசை, நசை, பசை, விசை, வசை, பூசை
6 கோல், சூல், செல், வில், கல். வேல்

## மாணவர் மன்ற அங்கத்தவர் விண்ணப்பப்பத்திரம்

அன்புள்ள மணிமாமாவுக்கு வெற்றிமணி மாணவர் மன்றத்தில் என்னையும் ஒரு அங்கத்தவராகச் சேர்த்துக்கொள்ளவும். 25 சத முத்திரை இத்துடன் அனுப்புகின்றேன்.

பெயர் ..............................

பாடசாலை ..............................

விலாசம் ..............................

பிறந்ததிகதி .............. வகுப்பு ..............................

ஆசிரியர் கையொப்பம் .............................. கையொப்பம்

பாடசாலையிற் கற்கும் மாணவர்களும் 20 வயதிற்குட்பட்டமற்றவர்களும் மாணவர் மன்றத்திற்சேரலாம், பாடசாலைமாணவர்கள் ஆசிரியர் ஒருவரின் கையொப்பத்துடன் அனுப்பவேண்டும். இந்தியநண்பர்கள் 4—அணாமுத்திரையும் இலங்கை நண்பர்கள் 25சத முத்திரையும் பத்திரத்துடன் அனுப்பவேண்டும் —மணிமாமா

# பேனு நண்பர்கள்

அன்பார்ந்த மருமக்களே!

சென்ற ஆண்டில் 45 பேனு நண்பர்களின் விலாசங்களை வெளியிட்டோம், புது ஆண்டு ஆரம்பத்தில் 15 இந்திய நண்பர்களின் விலாசங்களையும், 25 இலங்கைநண்பர்களின் விலாசங்களையும் வெளியிடுகின்றோம். ஆண்கள் ஆண்களுக்கும், பெண்கள் பெண்களுக்குமே எழுதவேண்டுமென்று விரும்புகின்றோம். இலங்கை நண்பர்களின் விலாசங்களை ஆங்கிலத்தில் வெளியிடுகின்றோம். பேனு நண்பர்கள் வரிசையில் தங்கள் பெயர்களை வெளியிட விரும்புகிறர்கள் பெயர், வயது, விலாசம், ஆகியவற்றை அறிவிக்கவேண்டும். ஏதாவது தேவைகளை விளம்பரஞ்செய்ய விரும்பின் 50 சத போஸ்ரல் ஆடர் அனுப்பவேண்டும். பிறதேசநண்பர்களின் விலாசங்கள் தேவையென யாராவது அறிவித்தால் அடுத்த இதழில் கனடா, அவுஸ்திரேலியா. நியூசிலாந்து நண்பர்களின் விலாசங்களை வெளியிடுவோம்.

மணிமாமா.

46 ரி. என், இராமலிங்கம் 12 தெப்பைக்கவுண்டர் வீதி, திண்டிவனம் இந்தியா

47 கொ. செல்வராசன், 2/4 ரங்கமன்னர் செட்டித்தெரு, அகரம்–பெரம்பூர், சென்னை

48 ஆர். எஸ். சுாமிநாதன், உத்தமபுரம், பாபனுசம்போஸ்ட், தஞ்சை

49 கே. ப. சதாசிவம் c/o கே–பி வெங்கடாசலம், கே–ப–எஸ். ஹோட்டல் கவண்டப்பாடி

50 பி–சுவாமிநாதன் 16/1 கலதுமேட்டுத்தெரு. குயப்பேட்டை, வேலூர்

51 ஆர். தினதயாளன் 4 ஏ–வி–வி கோவில்தெரு அமிஞ்சிக்கரை சென்னை

52 வளர்மதி 12/341 வெறைட்டிஹெளஸ் ரோடு- கோயம்புத்தூர்

53 வி. விஞயகம், 8, சமாதியான்குளத்துத்தெரு, திருவத்திபுரம், செய்யாறு

54 க. விஸ்வநாதன் 1, பச்சையப்பமுதலி தெரு கும்பகோணம் தஞ்சை

55 ரா. வேலாயுதம் தூயமரியன்னை உயர்நிலைப்பள்ளி மதுரை

56 ஆர். இரங்கநாதன் 531, ஆர்–ஜி–தெரு கோயாமுத்தூர்

57 எஸ். விஸ்வநாதன் 10 லஜபதிராய்ரேடு தல்லாகுளம் மதுரை

58 எஸ். எம். ஹூசைன் 4. முஸ்லீம் வீதி லாகூர் பாகிஸ்தான்

59 பிரேம்குமார் 111/58 ரிலக்பஜார் டில்லி 6 இந்தியா

60 செல்வி சரலா துரைசுவாமி 45 பஸ்சுல்லாவீதி சென்னை 17

## இலங்கை நண்பர்கள்

61 S. M. Mohamed, Zahira College Hostel, Matale
62 Zavahir S. Fareed, 624 Main Street, Matale
63 S. I. Thasthakeer, 452 Main Street, Matale
64 S. Samsudeen, 563 Main Street, Matale
65 T, B. Jamaldeen, Katupillagolla, Rambodagala, Kurunegala
66 K. Pathmanathan, Attabage Group, Gampola
67 M. I. M. Mohamed, St. Andrew's College, Gampola
68 A. H. M. Sulaiman, 84 Stace Road, Colombo 14
69 M. V. Visagaperumal, Beach Road, Katkovilam, Point Pedro
70 M. Nalliah, 8 De Soysa Avenue, Mount Lavania
71 U. L. A. Razak, 27 Forbes Road, Maradana
72 Jayaratnam, Klang House, Araly North. Vaddukoddai
73 A. C. Mohideen, 265 Chetty Street Matale
74 Mahmood Naina, Zahira College Matale
75 A. Jainudeen, I Fort Road Chilaw
76 S. T. Jogeswaram, Jaffna College Vaddukoddai
77 N. M. Hussein. 28/8 School Lane Dematagoda Road Colombo
78 S. Rajah, Bowlana Group Deltota
79 N. Mahesan, Govt; College Batticaloa
80 B. Fareed, St. Joseph College Bandarawella
81 Miss Sithy Ibrahim. New Cot Kongtree Road Galle
82 Miss Rose Gunaratnam, 1st Mile Post Uduvil Chunnakam
83 Miss Kamala Devi, Karthigesu "Indrawasa" Vaddukoddai West Vaddukoddai
84 Miss Cicielia Ratnam Govt. Quarters Colline Cresent Ratnapura
85 Sithi Bulgis Police Station Bandarawela

---


**AUTOGRAPHS** ஞாபகக்குறிப்புப் புத்தகம்

ஆசிரிய கல்லூரி மாணவமாணவிகளும் மேல் வகுப்பு மாணவர்களும், அவசியம் வைத்திருக்கவேண்டியவை. பிரிந்துசெல்லும் நண்பர்களுக்கு அன்பளிப்பாகக் கொடுக்கக்கூடியது

5½X4½ அங் தலஅளவு தபால்செலவுடன் ஒன்று விலை 1 ரூபா

10 பிரதிகளுக்கு கூடுதலாக எடுத்தால் 20 சதவீதம் கழிவு கொடுக்கப்படும்

**Vettimani - Nawalapitiya**


---

"பெண் ஒழுக்கம் காத்தல் வேண்டும் என்பதை ஒருமுறைக்குப்பன் முறை யான்வலியுறுத்துகிறேன். அவ்வொழுக்கம் ஆணுலகிற்கும் வேண்டற்பாலதென்று அவ்வளவில் வலியுறுத்துகிறேன்,

திரு. வி. கலியாணசுந்தர முதலியார்

# சிறுவர்போட்டி விதிகள்

1. வயதுக்கட்டுப்பாடின்றி எவரும் சிறுவர்போட்டியில் பங்கு பற்றலாம்

2. விடைகளை அச்சுக்கூப்பன்களிலேனும் தனிக்காகிதங்களிலேனும் மையினால் தெளிவாக எழுதவேண்டும். எழுத்துக்களை அழித்தல் திருத்தல் ஆகாது.

3. பிரவேசக்கட்டணத்தை இலங்கைப் போஸ்ரல் ஆடர் அல்லது மணி ஆடர் அல்லது சிறுவர் போட்டிப்பிரவேசக்கட்டணக் கூப்பன் மூலம் **சிறுவர்போட்டி-நாவலப்பிட்டி** என்ற விலாசத்திற்கு அனுப்பவேண்டும்

4. முற்றிலும் சரியான விடை அல்லது கிட்டத் தட்டச்சரியான விடையனுப்புகிறவர்களுக்கு முதலாம் பரிசும் அதேபோல இரண்டாவது பரிசும் கொடுக்கப்படும்- பலர் பரிசுபெறின் பரிசுத்தொகை பகிர்ந்து கொடுக்கப்படும் ஒருவர் ஒரு முதலாம் பரிசும் ஒரு இரண்டாம் பரிசும் ஒரு விசேஷ பரிசும் ஒரு போனஸ் பரிசும் பெறமுடியும்.

5. ஒரேகவரில் ஒரேபெயருக்கு அதிக கூப்பன்கள் அனுப்புகிறவர்களுள் இருவருக்கு முறையே ரூ. 35, ரூபா 15 விசேஷ பரிசாகக்கொடுக்கப்படும்

6. நேரில் விடைகளைக் கொடுக்க விரும்புகிறவர்கள் நாவலப்பட்டி மிட்லண்ட்-பிரிண்டர்ஸிலுள்ள சிறுவர் போட்டி நிலையத்தில் கொடுக்கலாம்.

7. முடிவு திகதியின் பின் கிடைக்கும் விடைகளும் உரிய பிரவேசக்கட்டணத்துடன் கிடைக்காத கூப்பன்களும் நிகாரிக்கப்படும்

8. சம்பந்தப்பட்ட போட்டியில் பரிசுபெற உரிமையுடையவர்கள் போட்டி முடிவு வெளியாகிய ஒருகிழமைக்குள் தங்கள் கோரிக்கைகளை எழுத்து மூலம் அறிவிக்கவேண்டும்

9. பிரவேசக் கட்டணத்துடன் 10 சத முத்திரை யனுப்புகிறவர்களுக்கு மாத்திரம் போட்டியின் முடிவு திகதியின் மறுதினமே சரியானவிடை பரிசு பெற்றோர் விபரம்அனுப்பிவைக்கப்படும், மற்றவர்கள் வெற்றிமணியில் பார்க்கலாம்

10. போட்டியின் சகலவிஷயங்களிலும்போட்டியாசிரியரின் தீர்ப்பேமுடிவானது

Registered at the G-P-O as a News Paper No- 59/300.


# ஞாபகப்படுத்துகிறோம்.

எங்களிடம்:-

பாடசாலைக்குரிய புத்தகங்கள், உபகரணங்கள்,

வீரகேசரி, தினமணி, கல்கி,

ஆனந்தவிகடன் - தினமணிக்கதிர்

கல்கண்டு, கரும்பு, குண்டூசி, பேசும்படம்

சித்திரா, குடும்பக்கலை, கலைமகள், மர்மக்கதை ஆகிய பத்திரிகைகளும் பெற்றுக்கொள்ளலாம்.

பாடசாலைகளுக்கும் ஆசிரியர்கட்கும் தகுந்த கமிஷன் கொடுக்கப்படும்.

மனேஜர்,

எம். ஓ. முருகேசபிள்ளை அன் சன்ஸ்

இல, 4. அம்பகமுவவீதி [போன் - 329] நாவலப்பிட்டி.

---

கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

## யாழ்ப்பாணம் ஹோட்டல்

நாவலப்பிட்டி.

நாவலப்பிட்டி நகரத்திலுள்ள

**யாழ்ப்பாண ஹோட்டலில்**

யாழ்ப்பாண முறைப்படி தயாரிக்கப்பெறும் ருசிமிகுந்த உணவுவகைகளைச்

சுவைத்துப் பார்த்திருக்கிறீர்களா?

ஒருமுறை விஜயஞ்செய்யுங்கள்.

இல, 23. அம்பகமுவ வீதி

நாவலப்பிட்டி

மனேஜர்


அச்சுப்பதிப்பு: மிட்லன்ட் பிரின்டர்ஸ்-நாவலப்பிட்டி. ஆசிரியர் ஏ. கே. சாமி